BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

திருவாசகம் சொல்லும் அறநெறிகள்

கவிஞர் நிர்மலா சிவராசசிங்கம்
தமிழ் ஆசிரியர், ஆசியன் தமிழ்ப் பாடசாலை,
கசக்கேன் புக்ஸே, சுவிற்சலாந்து.

ஆய்வுச் சுருக்கம்

திருவாசகத்தை இயற்றியவர் மாணிக்கவாசகர் ஆவார். இது 656 பாடல்களைக் கொண்டது. 51 பிரிவுகள் உள்ளன. எட்டாம் திருமுறை என்று அழைக்கப்படுகிறது. சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் வரை அமைந்துள்ளது. திருவாசகத்தைப் படித்தால் உள்ளம் இளகும். உயிர் உருகும். கரும்புச் சாற்றில் தேன் கலந்து, பால் கலந்து, கனியின் சுவை கலந்து இனிக்கும் திருவாசகப் பாடல்கள் உயிரில் கலந்து உவகை தரும் என்று இராமலிங்க வள்ளலார் கூறுவார். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்ற தொடர் திருவாசகப் பாடல்களின் கனிவுத் தன்மையைப் புலப்படுத்தும். 'எலும்பை உருக்கும் பாட்டு' என்று டாக்டர்.ஜி.யூ.போப் கூறுவார். மாணிக்கவாசகரது பாடல்கள் எல்லோரது மனதையும் கவர்பவை. 'ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியை' என்ற திருவெம்பாவைப் பாடலையும், 'நமசிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க! எனத் தொடங்கும் சிவபுராணத்தையும், 'முத்திநெறி அறியாத மூர்க்கரொடு' எனத் தொடங்கும் அச்சோப் பதிகத்தையும் எழுதப் படிக்கத் தெரியாத சிற்றூர் மக்களும் காதால் கேட்டு, மனப்பாடம் செய்து, வெகு எளிதாகப் பாடுவதைக் காணமுடியும்.

மனித வாழ்வு நெறி குன்றாமல் இருக்க வேண்டுமானால் அறநெறிப் படி இருக்க வேண்டும். அறு+அம் தீமையினை அறுத்துவிடு என்ற பொருளில் அறம் கையாளப்படுகிறது. நன்மையினை நாடச்செய்தல், தீமையினைக் கலைத்து விடல் என்பதனை நோக்கமாகக்கொண்டு விளங்குவது அறம் ஆகும். திருவாசகத்தில் அன்பு நிலையினை திருப்பதிகம்(2), திருச்சதகம்(11,35,77,78,94) முதலிய பாடல்களிலும், இன்பநெறியினை யாத்திரைப்பத்து(1), சிவபுராணம்(16, 67, 79), அண்டப்பகுதி(121) முதலிய பாடல்களும் பதிவு செய்கின்றன. பணிவுடமை குறித்து நீத்தல் விண்ணப்பம்(1), திருச்சதகம்(27), சிவபுராணம்(60-61) முதலிய பாடல்கள் கூறுகின்றன. மேலும், மனத்தூய்மை குறித்து சிவபுராணம்(8) முதலிய பாடல்கள் வழியும் அறநெறிக்கோட்பாடுகளை எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரையில், விளக்கமுறைத் திறனாய்வு அணுகு முறையும், ஒப்பீட்டு ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இக்கட்டுரையானது, ஒவ்வொரு மனிதனும் அறநெறி வழுவாமல் வாழவேண்டும் என்பதையும், ஒவ்வொருவரும் மனத்தூய்மையுடன் அருள் உள்ளத்தோடு திகழ வேண்டும் என்பதையும், மேலும், அன்பு உள்ளத்தோடு அஞ்சா நெஞ்சினராய் வாழ வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.

திறவுச் சொற்கள்

திருவாசகம், மாணிக்கவாசகர், அறம், அன்பு, மனத்தூய்மை

முன்னுரை

மனிதனை நன் நெறிப்படுத்துவது இந்துமதமும் அதன் இலக்கியங்களும். சைவ சமயத்தில் திருவாசகம் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பது ஆகும். மேலும், மனித வாழ்வு நெறி குன்றாமல் இருக்க வேண்டுமானால் அறநெறிப் படி இருக்க வேண்டும். அறம் என்பது நன்மையினை நாடச் செய்தல், தீமையினைக் கலைத்து விடல் என்பதாக அமைகிறது. மனிதன் மனிதனாக வாழ இத்தகைய அறச் சிந்தனைகள் மனித வாழ்க்கைக்கு மிகவும் தேவையானதும், அவசியமானதும் ஆகும். திருவாசகத்தில் காணப்படும் அன்பு நிலை, இன்ப நெறி, பணிவுடமை, மனத்தூய்மை போன்ற அறநெறிகளை எடுத்துக்கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

அறம்

அறம் என்பது யாதெனக் கேட்கின் "ஒழுக்கம், ஈகை மற்றும்கடமை என்ற மூன்றின் ஒருமித்தத் தொகுப்பு" (சேயோன், 2023: ப.138) என ஆன்றோர் கூறுவர். அறமானது அருள் என்ற உணர்வினால் தோன்றுகிறது. இதனை அருள் உணர்வினால் தோன்றும் நெறி, நன்னெறி மட்டுமல்ல! அது, தீது இல் நன்னெறியாகும். அரியது: பொது மனித வாழ்க்கைக்குரியது, அறவாழ்வினனாக ஆக்குவது, அனைவரது புகழ்ச்சிக்கும் உரியது.

திருவாசகத்தில் அன்புநிலை

திருவாசகத்தில் அடங்கிய ஐம்பத்தொரு பதிகங்களிலும் சிவன்பால் மாணிக்கவாசகர் பெருமாள் காட்டிய அயரா அன்பைத் தாய் தன் மகளின் மேல் காட்டுகின்ற அன்பு போலவும் காதலர், காதலிகளின் அன்பு போலவும் தெள்ளத்தெளிய உவமையாகக் கூறலாம். திருவாசகமே எல்லையற்ற பரம்பொருளாகிய 'அன்பே சிவம்'என்ற தத்துரூபமான சிவன்பால் கொண்ட தலைசிறந்த அன்பின் வெளிப்பாடேயாகும்.

"அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு" *(திருக்குறள்: 74)*

அதாவது அன்பு தன் உள்ளத்தை மென்மைப்படுத்தி அனைவரிடத்தும் நட்பைச் செலுத்த ஏதுவாகிறது. அன்பானது மனத்தை மென்மைப்படுத்துகிறது. அதுபோன்று திருவாசகம் கருங்கல் மனத்தினையும் உருக்கி விடுகிறது. அன்பானது உள்ளத்தில் அதிகமாக தீய குணங்கள் மனத்தை விட்டு அகன்று மனிதனைத் தெய்வத்தன்மை உடையவனாக ஆக்குகின்றது.

மாணிக்கவாசகப் பெருமான் சிவபெருமானைத் துதிக்கும் பொழுது கோயில் திருப்பதிகத்தில்,

"இன்பம் என்னுடைய அன்பே" *(திருவாசகம், கோயில் - திருப்பதிகம் : 1)*

என்று குறிப்பிடுகிறார்.

"அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்து உருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யான் இதற்கு ஓர் கைம்மாறு" *(திருவாசகம், கோயில் –திருப்பதிகம்: 2)*

அன்பின் காரணமாய் அடியேனாகிய நான் என்னுயிரும் உடலும் ஆனந்தமாய்க் கசிந்துருக என் தகுதிக்கு மேலான அருட்செல்வத்தை அருளியுள்ளவனே, இதற்கு நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன் என மாணிக்கவாசகப் பெருமான் கூறியுள்ளார்.

"மைகலந்த கண்ணி பங்க
வந்து நின் கழல்பட - கணே
மெய் கலந்த அன்பர் அன்பு
எனக்கு ஈக வேண்டும்" *(திருவாசகம், திருச்சதகம் : 77)*

தாமே அன்பு உருக்கொண்ட மாணிக்கவாசகப் பெருமான் அன்பு வெள்ளமாகிய சிவபெருமானைத் தனக்கு அவன் திருத்தொண்டர்கள் அவன் திருவடிக் கமலங்களைச் சேர்ந்து மெய்மையிற் கலந்தது போன்று உண்மையான அன்பு வேண்டுமென்று மனமுருகிப் பாடுகிறார்.

"வேண்டும் நின் கழற்கண் அன்பு
பொய்மை தீர்த்து மெய்மையே" *(திருவாசகம், திருச்சதகம்: 78)*

அன்பே உருவான மாணிக்கவாசகப் பெருமான் இடையறாது சிவபெருமானை நோக்கித் தனக்கு அவன்பால் உண்மையாக அன்பு வேண்டுமென்று மனம் நெகிழப் பாடுகிறார்.

"யானே பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப்பெறலாமே?" *(திருவாசகம், திருச்சதகம்: 94)*

அன்பே உருவான மாணிக்கவாசகப் பெருமான் இடையறாது சிவபெருமானை நோக்கித் தனக்கு அவள்பால் உண்மையாக அன்பு வேண்டுமென்று மனம் நெகிழப் பாடுகிறார்.

"ஆட்கச்சீர் மணிக்குன்றே இடையறா அன்பு உனக்கு என்
ஊடு அகத்தே நின்று உருகத்தந்தருள் எம் உடையானே" *(திருவாசகம், திருச்சதகம் :11)*

அடிகளார் திரும்பத் திரும்பத் தனக்கு அவன்பால் உண்மையான அன்பு வேண்டும் மாறா அன்பு வேண்டும் என்று வணங்குகிறார்.

"ஆடுகன் நிலை கூத்துடையான் கழற்கு
அன்பு இலை என்புஉருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாத மலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை
துணை இலிபிணை நெஞ்சே" (திருவாசகம், திருச்சதகம் :35)

மேற் கூறியவாறு ஆடிப்பாடித் தேடி மலர் சூடுகின்ற இவ்வாறான இறை வழிபாடுகளெல்லாம், இறைவன்பால் கொண்ட அன்பினால் வரத்தக்கவை. அன்பு இருந்தால் தான் இவ்வாறெல்லாம் வழிபட முடியும். ஆகவே அடிகளால் ஆடலரசனை வேண்டி அவன் கழல் இணையடிகள் பேரில் தனக்கு மீளா இடையறா, மென்மையான அன்பு வேண்டுமென்று வழிபடுகிறார்.

திருவாசகம் காட்டும் இன்ப நெறி

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற சொற்றொடரைத் திருமூலரது திருவாக்கிலே காண்கிறோம். அதுபோலவே அமைந்துள்ள பல சொற்றொடர்கள் திருவாசகத்திலேயும் காணப்படுகின்றன.

"பூவார்சென்னி மன்னன் எம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாதள்ளங்கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளக்கருணையினால்
அவா என்னப்பட்டன்பாய்
ஆட்பட்டீர்வந்தொருப்படுமின்
போவோம் காலம் வந்ததுகாண்
பொய்விட்டுடையோன் கழல் புகவே" (திருவாசகம், யாத்திரைப்பத்து :1)

என்றமைந்த யாத்திரைப் பத்து என்னும் பதிகம் முழுவதும் தாம் பெற்ற இன்பத்தை அடியார்களும் பெற்று அனுபவிக்க அழைப்பவனாகவே இருத்தல் காணத்தக்கது.

"ஆராத இன்பம் அருளும்மலை போற்றி" (சிவபுராணம் -16)
"ஆராஅமுதே அளவிலாப் பெருமானே" (சிவபுராணம் -67)
"ஆற்றின் வெள்ளமே அத்தா" (சிவபுராணம் -79)
"ஊற்று இருந்து உள்ளம் களிப்போன் போற்றி" (அண்டப்பகுதி -121)

மாணிக்கவாசகப் பெருமான் சிவபெருமான் மீது கொண்ட இறை இன்பத்தைத் திருவாசக பதிகங்களில் கூறியுள்ளார்.

திருவாசகம் காட்டும் பணிவுடமை

உலக மக்கள் யாவரும் தாம் இறைவனிடத்தில் சிறிது அன்பு செய்து, சில வழிபாடுகளைச் செய்வாராயின் தமது செயலையே பெரிதாகவும் அச்செயலுக்கு ஏற்ற பயனை இறைவன் தரவில்லை எனவும் எண்ணி இறைவனை வெறுத்துக் கொள்பவராகவே இருப்பர். ஆனால் பெரியோர்கள் நிலை இதற்கு முற்றிலும் மாறுபட்டது. இறைவன் தமக்குச் செய்யும் சலங்கள் யாவும் அவன் கருணை மிகுதியையே காட்டும். தமது தவத்தின் பெருமையைக் காட்டா எனவும் எண்ணி இறைவனிடத்து மேலும் மேலும் அன்பு மீதூரப்பெறுவர்.

"பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து" (திருக்குறள்-978)

என்னும் திருக்குறளிலும் குறிப்பால் உணர்த்தப்பட்டது. இந்தப் பணிவு நிலையைத் திருவாசகமும் அறிவுறுத்துகிறது.

"கடையவனேனைக்கருணையி
னாற்கலந் தாண்டு கொண்ட விடையவனே" (திருவாசகம்,நீத்தல் விண்ணப்பம்:1)

என்பதில் மாணிக்கவாசகர் தம்மைக் கடையவராகவே கருதியமை வெளிப்படுகின்றது.

"ஆய நான்மறையவனும் நீயே யாதல்

அறிந்து, யான் யாவரினம் கடைய னாய

நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு

நாதனே நான் உனக்கோர் அன்பன் என்பேன்" (திருவாசகம், திருச்சதகம் : 27)

என்பதில் **'கடையேன்'** என்று மட்டும் கூறாமல் யாவரினும்கடையேன் என்கிறார். அதனால் தம்மினம் கடைப்பட்டவர் ஒருவரும் இல்லாது தாமே. அனைவரிலும் கடைப்பட்டவராகக் கருதுகின்ற அவரது மனநிலை நன்குப் புலனாகிறது.

"நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவானதத்துவனே" (திருவாசகம், சிவபுராணம் : 60 -61)

தம்மை நாயோடு ஒப்புமைப் படுத்தலோடு மட்டுமின்றி, நாயினும் கீழ்ப்படுத்திக் கூறுதலைக் காண முடிகிறது. இந்தப் பணிவு நிலை மனித வாழ்க்கையின் சிறந்த நெறியினைத் திருவாசகப் பாடல்கள் உணர்த்துகின்றன.

திருவாசகத்தில் மனத்தூய்மை

மனத்தூய்மை என்பது மனிதராய்ப் பிறந்த அனைவருக்கும் ஓர் உயர்ந்த நெறியாகும்

"மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்" (திருக்குறள்:34)

மனதில் மாசில்லாமல் குற்றமில்லாமல் வாழ்வதே சிறந்த அறமாகும். ஏனெனில் ஒருவன் செய்யும் செயல்களுக்கெல்லாம் காரணமாய் அமைவது அவனுடைய மனதில் தோன்றும் எண்ணங்களே ஆகும்.

"என் மனமேஒன்றிப்புக்கனன்போந்தசுவடில்லேயே

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" (திருவாசகம், சிவபுராணம் -8)

இமைக்கும் கால அளவு கூட என்னுடைய நெஞ்சில் நீங்காதவனாய் இறைவன் இருக்கின்றான்.

நம் எண்ணங்களையும் செயல்களையும் கண்காணித்து வரும் ஒருவன் இருக்கிறான். அவன் இல்லாத இடமே இல்லை. எனவே மனதில் தூய எண்ணங்களையே புக விட வேண்டும் என்கிறார். இதுவே மாசில்லாமல் வாழ்வதற்குரிய வழியாகும் என்கிறார். மாசற்ற மனங்களில் ஈசன் குடி யிருப்பான் என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார்.

முடிவுரை

இவ்வாறு மனிதன் மாண்புடன் வாழ்வதற்கான அறச் சிந்தனைகளைக் கொண்ட கருவூலமாக திருவாசகம் திகழ்கிறது. திருவாசகம் மனித வாழ்க்கைக்குத் தேவையான அன்பு, பணிவு, மனத்தூய்மையைக் கூறுவதோடு வாழ்வின் இன்ப நெறியையும் காண்பிக்கிறது. மேலும், ஒவ்வொரு மனிதனும் அறநெறி வழுவாமல் வாழ வேண்டும் என்பதையும் மனத் தூய்மையுடன் அருள் உள்ளத்தோடு திகழ வேண்டும் என்பதையும் அன்பு உள்ளத்தோடு அஞ்சா நெஞ்சினராய் வாழ வேண்டும் என்பதையும் திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான் எடுத்துரைத்துள்ளார். இந்து சமய இலக்கியங்கள் மனிதனை அற நெறியுடன் வாழ வழிகாட்டும் மிகப்பெரும் வழிகாட்டிகள். எனவே, அத்தகைய இலக்கியமான திருவாசகத்தை வரும் இளம் தலைமுறையினர் வாசிப்பது மிகவும் அவசியம். இந்த திருவாசகத்தை படிப்பதன் மூலம் அன்பும், கருணையும், அறச் சிந்தனையும் கொண்ட எதிர்கால சமுதாயம் உருவாகும் என்று உறுதியாக நம்பலாம்.

துணைநூற் பட்டியல்

இளவரசு, சோம., நன்னூல் எழுத்ததிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2018

சாமி சிதம்பரனார்(உரை), திருக்குறள் பொருள் விளக்கம், சாரதா பதிப்பகம், சென்னை, 2018

சுப்பிரமணியபிள்ளை, கா(உரை), திருவாசகம், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2018

சேயோன், முனைவர்(பதிப்பாசிரியர்), திருவள்ளுவர் மலர், மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம், சென்னை, 2023

புலியூர் கேசிகன்(உரை), தொல்காப்பியம், பாரி நிலையம்,சென்னை, 2009

விமலானந்தம், மது.ச., தமிழ் இலக்கிய வரலாறு, அபிராமி பதிப்பகம், சென்னை, 2002

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.